

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 04.09.2026

# காமராசர் மறைவின் போது....?

**“காமராசர் மறைவின் போது மெரினா கடற்கரையில் இடம் கேட்டோம். கிடைக்கவில்லை. அப்போதும் சிரித்த முகத்துடன் நாங்கள் அதைக் கடந்து சென்றோம்” என்று சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் தாரகை கத்பர்ட், சட்டமன்றத்தில் சொல்லி இருக்கிறார்.**

**எத்தனை தடவை விளக்கம் அளித்தாலும், உண்மைகளைத் தெளிவுபடுத்தினாலும் சிலர் பழைய பொய்களையே திரும்பத் திரும்பப் பேசுவார்கள். அத்தகைய பொய்களில் ஒன்று தான், ‘மெரினாவில் பெருந்தலைவர் காமராசர் உடலை அடக்கம் செய்ய இடம் தரவில்லை’ என்பது ஆகும். இரண்டு அமைச்சர் பதவிகளுக்காக காங்கிரஸ் கட்சி தினமும் எத்தனை பொய் வேடங்கள் போட வேண்டி இருக்கிறது?**

‘முரசொலி’ தலையங்கத்திலும் இதற்கு பதில் அளிக்கப்பட்டுள்ளது.

பெருந்தலைவர் காமராசர் அவர்களுக்கு 1975 அக்டோபர் அன்று தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. அப்போது, ஸ்தாபன காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், சட்டமன்ற மேலவை எதிர்க்கட்சித் தலைவருமான கே.ராஜாராம் (நாயுடு) அவர்கள் ஆற்றிய உரையைப் படித்தால் முழு உண்மையும் அறியலாம்.

“பெருந்தலைவர் காமராசர் அவர்கள் சாதாரண தொண்டராக இருந்த காலத்திலிருந்து எனக்கும் அவருக்கும் நட்பு உண்டு. அவரும் நானும் பல கிராமங்களுக்கு கால்நடையாகவே சென்று பேசியிருக்கிறோம்” என்ற பீடிகையுடன் தொடங்கும் கே.ராஜாராம் அவர்கள், பெருந்தலைவர் மறைந்த அன்று என்ன நடந்தது என்பதைச் சொல்கிறார்....

“அக்டோபர் 2 இரவில்...பெருந்தலைவர் காமராசர் மறைந்த அன்று, நமது மாநில அரசை நடத்தும் முதலமைச்சர் கலைஞர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் உடனே அவரது வீட்டுக்குச் சென்றனர். தங்களின் சகோதரர்களில் ஒருவர் இறந்துவிட்டதைப் போல, அந்த இடத்தில் அவர்கள் இருந்தார்கள். ‘மற்றொரு கட்சித் தலைவர் இறந்துவிட்டார்’ என்று அவர்கள் நினைத்ததாகத் தெரியவில்லை.

முதலமைச்சர் அவர்கள் எங்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு துக்கம் தாளாது அழுதார். என்னுடைய உயிர் உள்ள வரை இது மறக்க முடியாது. அவ்வளவு பாச உணர்ச்சியை அவர் காட்டினார். காமராசர் அவர்களிடம் இருந்து எப்படி இந்த பாச உணர்ச்சியை அவர் பெற்றார் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. தமிழக ஆளுநர் அவர்களும் முதலமைச்சர் பக்கத்தில் அமர்ந்துகொண்டு தேம்பித் தேம்பி அழுதார்.

தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் காமராசருடைய பிரேதம் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு, அங்கேயே எரித்து, நினைவுச்சின்னம் கட்டுவது என்றுதான் முதலில் முடிவு செய்யப்பட்டது.

‘காமராசரின் உடலை ராஜாஜி ஹாலுக்குக் கொண்டுபோய் வைக்க வேண்டும். முதலமைச்சரிடம் அனுமதி கேளுங்கள்’ என்று சிலர் சொன்னார்கள். எப்படி அனுமதி கேட்பது என்று யோசித்த விநாடியே முதலமைச்சர் அவர்கள், காமராசர் வீட்டுக்கே வந்துவிட்டார்.

‘இங்கே கூட்டத்தைச் சமாளிக்க முடியாது. உடனே ஐயாவை ராஜாஜி ஹாலுக்குக் கொண்டுபோக வேண்டும்’ என்றார்.

நாங்கள் கனவு கண்டதைப் போல, நாங்கள் எதிர்பார்த்ததைப் போல முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்கள் மனதில் உள்ளதை எப்படி அவர் தெரிந்து கொண்டார் என்று இன்றுவரை எனக்குத் தெரியவில்லை. தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்கும், எனக்கும், என்னுடைய சகாக்களுக்கும் என்ன கைம்மாறு செய்வது என்றே புரியவில்லை.

காமராசரின் உடலை ராஜாஜி ஹாலுக்கு கொண்டு வந்து, பொதுமக்கள் வந்து செல்ல ஏற்பாடு செய்துவிட்டு, தலைவர்கள் அமர மேடை அமைத்துக் கொண்டிருந்த நேரத்தில், ‘மந்திரிசபை இங்குதான் கூடுகிறதோ?’ என்கிற வகையில் எல்லா அமைச்சர்களும் அங்கே வந்துவிட்டார்கள். காமராசர் உடலை எங்கு வைத்து எரிப்பது? அடுத்தடுத்த காரியங்கள் என்ன? நாங்கள் எல்லாம் கூடி ஆலோசனை செய்து கொண்டிருந்தோம். ‘கிண்டியில் உள்ள காந்தி மண்டபத்திற்குப் பக்கத்தில் எரிக்க வேண்டும்’ என்று முதலமைச்சர் அவர்களே சொன்னார்கள்.

அன்று இரவு எட்டு மணிக்கு, கனமழை பெய்து கொண்டிருந்தது. அப்போது முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய காரில் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களையும், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி காரியதரிசியையும் என்னையும் அழைத்துக்கொண்டு கிண்டி காந்தி மண்டபம் சென்றார்.

வெளிச்சம் இல்லாத அந்த இடத்தில், நாங்கள் சென்ற கார்களைத் திருப்பி நிறுத்தி அதன் விளக்கு வெளிச்சத்தில் இடத்தைத் தேர்வு செய்தார். இதை அதிகாரிகளே செய்யலாம். ஆனால் முதலமைச்சர் அவர்கள் எங்களை அழைத்துக்கொண்டு தன்னுடைய நேரடி பார்வையில் இவற்றையெல்லாம் செய்தார்கள்.

அனைத்து அமைச்சர்களும் இரவெல்லாம் தூக்கமில்லாமல் அங்கு அடர்த்திருந்த மரங்களை, புதர்களை அகற்றி, தகனத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். இதற்கெல்லாம் என்ன கைமாறு செய்வது என்று எங்கள் கட்சிகாரர்களுக்குத் தெரியவில்லை. என்னைப் பொறுத்தவரையில் இதை என்றுமே மறக்க முடியாது. அன்றைய தினம் தமிழ்நாடு அரசிடமிருந்து அப்படியொரு அரசு மரியாதையை நாங்கள் எதிர்பார்க்க வில்லை.” (முரசொலி, 24.10.1975) என்று பேசி இருக்கிறார் கே.ராஜாராம் அவர்கள். இது எல்லாம் தாரகை கத்பர்ட் போன்றவர்களுக்கு தெரியாது.

**பெருந்தலைவரைப் போற்றி திராவிட முன்னேற்றக் கழக அரசுகள் காலத்தில் செய்தவை, தனித் ‘தலையங்கம்’ தீட்டும் அளவுக்கு மிக மிக நீண்டவை. இவை நன்றியுள்ள காங்கிரஸ்காரர்கள் அறிவார்கள்.**

**சட்டமன்ற உறுப்பினர்களாக வருகிறவர்கள் இதை எல்லாம் படித்துப் பார்த்து விட்டு வர வேண்டும். தி.மு.க. தயவில் சட்டமன்ற உறுப்பினர் ஆனோம் என்ற நன்றி உணர்ச்சிகூட இல்லாமல், த.வெ.க. அரசுக்கு அற்ப சந்தோஷத்தை ஏற்படுத்துவதற்காக இது போன்ற பொய்களைப் பேசி சட்டமன்றப் பதிவேட்டில் தங்களது துரோக நடவடிக்கைகளை பதிவு செய்வது கண்டிக்கத்தக்கது.**

●●

## த.வெ.க. ஆட்சியில் அவலநிலை! சேலம் கோரிமேட்டில் உள்ள விடுதியில்

# அரசு கல்லூரி மாணவிகள் பசியுடன் பாடம் படிக்கும் அவலம்!

## அதிகாரிகளிடம் கூறியும் எந்த நடவடிக்கையும் இல்லை என மாணவிகள் குமுறல்!

*சேலம், செப். 4 -*

*சேலம் கோரிமேட்டில் அரசு மகளிர் கலைக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. இந்த மகளிர் கல்லூரியை அப்போதைய முதலமைச்சராக இருந்த கலைஞர் 1973ல் தொடங்கி வைத்தார்.*

*இக்கல்லூரியில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் இளங்கலை மற்றும் முதுகலைப் படிப்பு படித்து வருகின்றனர்.*

*இக்கல்லூரிக்கு அருகிலேயே 2 சமூகநல விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.*

*இதில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட மாணவிகள் தங்கி படித்து வருகின்றனர். இந்த மாணவிகளுக்கு தரமான மற்றும் தேவையான உணவு வழங்கப்படுவதில்லை என்று புகார் கூறுகிறார்கள். அதோடு விடுதியில் மாணவிகளை கட்டாயப்படுத்தி வேலை வாங்குகிறார்கள்.*

*இது குறித்து மாணவிகள் கூறியதாவது :-*

*மாணவிகளின் எண்ணிக்கைக்கு தேவையான அளவு உணவு பொருள் ஒதுக்கீடு செய்யப்பட்டாலும் அதன் பலன் முழுமையாக எங்களுக்கு கிடைப்பதில்லை. குறிப்பாக 4 இட்லி வழங்க வேண்டியதில் 2 இட்லி மட்டுமே வழங்குகின்றனர்.*

*100 மாணவிகள் இருந்தால் 80 முட்டைகள் மட்டுமே கொடுக்கின்றனர் மீதமுள்ள முட்டை மற்றும் அரிசி மாவை வார்டன் மற்றும் சமையலர் வீட்டிற்கு எடுத்துச் சென்று விடுகின்றனர். ஆக அரசு விடுதியில் தங்கி பசியுடன் அரை வயிற்றுடன் தான் படிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது.*

*விடுதியில் உள்ள குறைபாடுகள் குறித்து உயர் அதிகாரிகளின் பார்வைக்கு கொண்டு சென்றும் அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை என்று மாணவிகள் கூறினார்கள்.*

*த.வெ.க. ஆட்சியில் கல்லூரி மாணவிகள் பசியுடன் தான் பாடம் படிக்க வேண்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.*



**தனி மனிதர்கள் வீழ்த்தப்படலாம்!**

**ஆனால் லட்சியங்கள் வீழ்த்தப்படுவதில்லை!**

**- தலைவர் கலைஞர்**

## தந்தை பெரியாரின் 148–வது பிறந்தநாள் விழா:

# தமிழ்நாடு முழுவதும் தமிழினத்தின் பண்பாட்டுத் திருவிழா!

## திராவிடர் கழகம் அறிவிப்பு!

**சென்னை, செப்.4–**

**தந்தை பெரியாரின் 148–ஆம் ஆண்டு பிறந்த நாளான வரும் செப்டம்பர் 17 அன்று, தமிழர் இல்லமெல்லாம் உணர்ச்சியூட்டும் உற்சாக விழாவாக நடத்துவது என்றும், பட ஊர்வலம், குடும்ப விருந்து உள்பட பல்வேறு சிறப்புகளோடு ஒரு மாதம் முழுவதும் நடைபெற கழகத் தோழர்களும், பொறுப்பாளர்களும், இன உணர்வாளர்களும் திட்டமிட்ட வகையில் காலக் கதிரவன் தந்தை பெரியார் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடுவது என்றும் திராவிடர் கழகத் தலைமைச் செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**


அவ்விவரம் வருமாறு:

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தலைமையில், 3.9.2026 முற்பகல் சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற திராவிடர் கழகத் தலைமைச் செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

தீர்மானம் 1: இரங்கல் தீர்மானம்

தீர்மானம் 2: தந்தை பெரியாரின் 148 ஆம் ஆண்டு பிறந்த நாளை எழுச்சியூட்டும் நாளாக, நன்றியை வெளிப்படுத்தும் திருவிழாவாக நாடெங்கும் கொண்டாடுவது!

ஒப்பாரும், மிக்காரும் இல்லாதவர் உலகத் தலைவர் தந்தை பெரியார் ஆவார்! தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, அரசியல், ஜாதி, மத, பாலின வேற்றுமைகளைக் கடந்து, அனைவருக்கும் அனைத்தும் என்ற சம உரிமை, சமூகநீதிக்காகப் பாடுபட்டு, தன் வாழ்நாளிலேயே தனது போராட்டத்துக்கான வெற்றியைக் கண்டு களித்த காலக் கதிரவன் தந்தை பெரியாரின் பிறந்த நாள் என்பது தமிழ் இனத்தின் ஒட்டுமொத்தமான பண்பாட்டுத் திருவிழா நாளாகும். உலகம் முழுவதும் உள்ள பகுத்தறிவாளர்களுக்கும் அந்நாள் மகிழ்வூட்டும் பொன்னாளே!



அந்த வகையில் வரும் செப்டம்பர் 17, தந்தை பெரியார் 148 ஆம் ஆண்டு பிறந்த நாளை நமது இனத் திருவிழாவாகக் கொண்டாட வேண்டியது - நன்றி காட்டும் திருநாளாக மட்டுமல்ல, இனி நாம் பெறவேண்டிய உரிமைகளுக்காக உறுதி எடுத்து உழைக்கும் உற்சாகத் திருவிழாவும் ஆகும்.

“பெரியார் உலகம்” என்ற அழியா வரலாற்று மய்யத்தை உருவாக்க நம்மை நாமே செயல் வேகப்படுத்திக் கொள்ள உறுதிப்படுத்திக் கொள்ளும் நாளுமாகும்.

அய்யாவின் இந்த 148-ஆம் ஆண்டு பிறந்த நாளை முன்னிலும் வெகு சிறப்பாக, மிகுந்த எழுச்சியாக, ஆக்கப்பூர்வமான வகையில் கொண்டாடுவது என்று இச்செயற்குழு புது உற்சாகத்தோடு தீர்மானிக்கிறது.

கழகத் தோழர்கள் புத்தாடை அணிந்து, கழகக் கொடியேற்றி, இனிப்புகள் வழங்கி, விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடவும், கீழ்க்கண்ட வகையில் கொள்கை விழாவாக அதனை திட்டமிட்டு நடத்திடவும் கழகத் தோழர்களை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

- செப்.17 காலை சென்னை, பெரியார் திடலில் பிறந்த நாள் விழா - மலர் வெளியீடு.
- மாலை - சென்னையில் தமிழர் தலைவர் பங்கேற்கும் பொதுக்கூட்டம்.
- தமிழ்நாடு முழுவதும் கழகத் தோழர்கள் வீடுதோறும் இனிப்புகள் வழங்கிக் கொண்டாடுதல்.
- செப்.17 அல்லது அவ்வாரத்தில் வாய்ப்பான நாள்களில் பெரியார் பட ஊர்வலம் - தமிழ்நாடெங்கும்.
- கழகக் கொடியேற்றுதல், தந்தை பெரியார் சிலை, படங்களுக்கு மாலை அணிவித்து, பொதுமக்கள் மத்தியில் விழா நடத்துதல், தெருமுனைக் கூட்டங்கள் நடத்துதல்.
- செப்.12 - பகுத்தறிவாளர் கழகம் சார்பில் பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டிகள்
- செப்.20 - தமிழ்நாடு முழுவதும் ஓட்டம்/நடை (Run/walk for Periyar).
- செப்.27 - குடும்ப விருந்து - பிள்ளைகளுக்கு விளையாட்டுப் போட்டி (சென்னையில், தமிழர் தலைவர் பங்கேற்பு)
- அக்டோபர் முதல் வாரத்தில் ஆங்கிலம், பிற மொழி களில் பன்னாட்டு அளவிலும், பிற மாநிலங்களிலும் இருந்து பங்கேற்கும் வகையில் காணொலிக் கூட்டம் நடத்துதல்.
- ‘பெரியார் கேட்கும் கேள்விகள்?’ புத்தகத்தை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், ஒரே நாளில், தமிழ்நாடு முழுவதும் பரப்புரை இயக்கம்.

இன்னோரன்ன வகையில், எந்த ஆண்டும் இல்லாத வகையில், ஏற்றமுடன், எழுச்சியுடன் முன்கூட்டியே திட்டமிட்டு, தமிழ்நாடு முழுவதும் கொண்டாடுவது என்று தீர்மானிக்கப்படுகிறது.

இவ்வாறு திராவிடர் கழகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அறங்காவலர்கள் பெயரை சேர்க்காமல் கும்பாபிஷேக அழைப்பிதழ்:

# ‘கோவில்கள் விவகாரத்தில் அரசியல் செய்வதை ஏற்க முடியாது’!

## மதுரை உயர்நீதிமன்றம் கருத்து!

மதுரை, செப். 4 -

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேக அழைப்பிதழில் அறங்காவலர்கள் பெயர்களை சேர்க்காதது குறித்த வழக்கில் கோவில்கள் விவகாரத்தில் அரசியல் செய்வதை ஏற்க முடியாது என மதுரை உயர்நீதிமன்றம் கருத்து தெரிவித்தது.

### கும்பாபிஷேக விழா!

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர் சுப்புலட்சுமி, மதுரை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது :-

மதுரை மீனாட்சிசுந்தரேசுவரர் கோவிலின் அறங்காவலர் குழு உறுப்பினராக உள்ளேன். மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேகம் வருகிற 17-ந்தேதி நடக்கிறது. இதற்கான அழைப்பிதழில் அறங்காவலர் குழுவினர் பெயர்களை சேர்க்காதது சட்டவிரோதம். எனவே கும்பாபிஷேக பணிகளில் நாங்கள் சட்டப்பூர்வ கடமைகளை நிறைவேற்ற அனுமதிக்கும்படி உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி சரவணன் முன்பு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

### அரசியல் காழ்ப்புணர்ச்சி!

அப்போது மீனாட்சி அம்மன் கோவில் அறங்காவலர் குழு தலைவர் ருக்மணி பழனி வேல்ராஜன் மற்றும் அறங்காவலர் மீனா ஆகியோர் சார்பில் வக்கீல் திலக்குமார் ஆஜராகி, தற்போதைய கும்பாபிஷேக விழாவில் அறங்காவலர்கள் குழுவினரை புறக்கணிப்பது சட்டவிரோத நடவடிக்கையாகும்.

அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவது எதிர்காலத்தில் தவறான முன்உதாரணமாக அமையும். எனவே மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேக விழா வருகிற 6ந்தேதி தொடங்கி 17ந் தேதி வரை நடக்கிறது. இந்த விழாக்களில் அறங்காவலர்கள் குழுவினரிடம் உரிய ஆலோசனை நடத்தியே ஒவ்வொரு முடிவுகளையும் அதிகாரிகள் எடுக்க வேண்டும். கும்பாபிஷேக விழா தொடர்பான கல்வெட்டுகளில் அறங்காவலர்கள் பெயரை கண்டிப்பாக சேர்க்க வேண்டும் என உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அவர் வாதாடினார்.

பின்னர் அரசு தரப்பில் வக்கீல் பாலசுப்பிரமணியம் வாதிடுகையில், இந்த விவகாரத்தில் உயர் அதிகாரிகளின் பங்கு எதுவும் இல்லை. கோவில் செயல் அலுவலர் தன்னிச்சையாக முடிவு எடுத்து இருக்கிறார் என்றார்.

### கல்வெட்டில் பெயர்!

அதற்கு நீதிபதி, மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேக அழைப்பிதழில் அறங்காவலர்கள் பெயரை சேர்க்காதது தவறு. இந்த விவகாரத்தில் அறநிலையத்துறை மீதான நம்பிக்கையை சீர்குலைக்கும் வகையில் அதிகாரிகளின் செயல்பாடுகள் உள்ளன. கோவில்கள் விவகாரத்தில் அரசியல் செய்வதை ஏற்க முடியாது. இந்த கும்பாபிஷேகம் முடிந்த பின்பு கோவிலில் வைக்கப்படும் கல்வெட்டில் அறங்காவலர்கள் பெயர் இடம்பெற வேண்டும்.

இவ்வாறு நீதிபதி உத்தரவிட்டு வழக்கை முடித்துவைத்தார்.